
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1215

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

173

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# ஆதி கலைக்கோல் பட்டறை-விழா

# கழக ஆட்சியின் சமூக நீதி முழக்கம்!

மண்ணோடும் மக்களோடும் ஆழமான உறவைப் பறைசாற்றுபவை கலைகள். இலக்கியத்தின் வழியே மனிதர் கண்ட வளர்ச்சியை, மொழியும் கவிதையும் எடுத்துரைத்தன என்றால், இசைக் கருவிகளின் வளர்ச்சியின் வழியே உயிர்த்துடிப்பாக வெளிப்பட்டவை நிகழ்த்துக் கலைகள். வாழ்க்கைக் கதைகளையும் சமூக உண்மைகளையும் மேடையேற்றி, சிந்தனைகளையும் உணர்வுகளையும் அனைவருக்கும் கொண்டுசேர்த்து, புதிய பாதை அமைத்துக்கொண்டவை நாட்டுப்புறக் கலை வடிவங்கள். அதிலும் ஆதித்தமிழர்களின் கலை வெளிப்பாடுகள் தமிழர்களின் பண்பாட்டு மரபுக்குச் சான்றாக உள்ளவை.

அந்த மரபின் உயிரோட்டமாகக் கலை வடிவங்களை இளைஞர்களின் உள்ளங்களில் விதைத்து, கலாசாரத்தின் வேர்களைப் புதுப்பிக்கும் மாபெரும் கலைப் பணியைச் செய்தது, நம் 'திராவிட மாடல்' அரசு. அதுதான், 'ஆதி கலைக்கோல் பட்டறை' மற்றும் 'ஆதி கலைக்கோல் விழா'. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் நடத்தப்பட்டது.

### கலைகளைக் கற்றல்

பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார நடைமுறைகளைக் கற்றல், தொன்மையான இசைக் கருவிகள் மற்றும் நாடகக் கலைஞர்களின் கலை ஆடைகள் வடிவமைப்புக் கற்றல் என மரபினை மீட்கும் புதிய முயற்சியாக, கடந்த 'திராவிட மாடல் ஆட்சி'க்காலத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சிதான், இந்தப் பயிற்சிப் பட்டறையும் விழாவும். பழைமையான கலைகளை மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட நையாண்டி மேளம், ஆதிவாசி நடனம், துடுப்பாட்டம், முதலான கலை வடிவங்களை இளையோருக்குப் பயிற்றுவிக்கும் திட்டம்தான், இந்தக் கலைத் திருவிழா.

22.9.2025 அன்று, சென்னை வர்த்தக மையத்தில் தொடங்கிய இந்தப் பட்டறை விழாவை, அன்றைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, கலைஞர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் பட்டறையில், அந்தந்தக் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களைக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 300 இளைஞர்கள் கலந்துகொண்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில், நாட்டுப்புறக் கலை, நாடகக் கலை, இலக்கியக் கலை மற்றும் காட்சிக் கலையில் சிறந்து விளங்கிய 10 கலைஞர்கள் வீதம் 40 இளைஞர்களுக்கு 20,000 ரூபாய் ஊக்கத்தொகையுடன், இரண்டு மாதங்களுக்கு இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த 'ஆதி கலைக்கோல் பட்டறை'யின் நீட்சியாக, இந்தக் கலைஞர்களைக் கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை நம் கண்முன் கொண்டுவரும் வகையில், 'ஆதி கலைக்கோல் விழா' என்கிற சிறப்பு நிகழ்ச்சியை டிசம்பர் 1, 2 தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடத்தியது, 'திராவிட மாடல் அரசு'. காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்தக் கலை விழாவில், பழங்குடி மக்களின் வரலாறு, புகைப்படக் கண்காட்சி, கலை மற்றும் சிற்பங்களின் கண்காட்சி, எழுத்தாளர்களின் கலந்துரையாடல் அரங்குகள் இடம்பெற்றன.



### வெளிச்சத்துக்கு வராத கருவிகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை வடிவங்களைப் பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் ஆகிய நோக்கங்களுக்காக நடத்தப்பட்ட இந்த விழாவில், பழங்குடி மக்களின் உணவை சுவைக்கவும் அதுகுறித்து அறிந்துகொள்ளவும் நேரடி சமையல் கூட வசதி, பாரம்பரிய உடைகள், இசைக்கருவிகள் மற்றும் புத்தகக் காட்சி ஆகியவையும் இடம்பெற்றன. ஒடுக்கப்பட்ட பழங்குடியின மக்களிடையே புழங்குகின்ற வெளிச்சத்திற்கு வராத இசைக் கருவிகள், பயன்பாட்டுச் சாதனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒடுக்கப்பட்ட பழங்குடியின மக்களின் வாழ்வியல் முறை புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இன்றைய தலைமுறை அவற்றைப் பார்ப்பதற்கு பெரும் வாய்ப்பாக இவை அமைந்தன.

பாடகர் தெருக்குரல் அறிவு, இசையமைப்பாளர் கார்த்திக் ராஜா, எழுத்தாளர்கள் அழகிய பெரியவன், இமையம், ஸ்டாலின் ராஜாங்கம், கவிஞர் சுகிர்தராணி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இரண்டு நாட்களில், கலை விழாவிலும் கருத்தரங்குகளிலும் சுமார் 25,000 பேர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து வந்திருந்த எண்ணற்ற நிகழ்த்துக் கலைஞர்கள், தங்கள் நிகழ்ச்சிகளை மேடை ஏற்றினர்.







**ஆதி கலைக்கோல் பட்டறை**

- நாட்டுப்புறக் கலை | நாடகக் கலை | இலக்கியக் கலை | காட்சிக் கலை
- துறைசார் வல்லுநர்களின் கலந்துரையாடல்
- கலை சார்ந்த களப்பயணங்கள்
- 3 நாட்கள் பயிற்சி, உணவு, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகள்.
- நடைபெற்ற தேதி : செப்டம்பர் 22, 23, 24.

> **எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரையும் ஒரே இடத்தில் திரட்டிய இந்த விழா மறைக்கப்பட்ட கலைகளை மீட்பதற்காக மட்டுமல்ல; அதை உயர்த்திப் பிடிக்கவும் செய்தது கழக அரசு.**

### உயர்த்திப்பிடிக்கும் கழகம்

"சமூகநீதி அரசியல், வரலாற்றுப் பின்புலத்தைக்கொண்ட தமிழ்நாட்டில், இதுபோன்ற நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுவது மிகவும் பொருத்தமானதும் காலத்தின் தேவையுமாகும் எனப் பல பக்கங்களில் இருந்தும் பாராட்டுகள் குவிந்தன. எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரையும் ஒரே இடத்தில் திரட்டிய இந்த விழா, மறைக்கப்பட்ட கலைகளை மீட்பதற்காக மட்டுமல்ல; அதை உயர்த்திப்பிடிக்கவும் செய்தது கழக அரசு.

ஒவ்வொரு முறையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறபோது மட்டும்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது தற்செயலானது அல்ல. கழகம் கொண்டிருக்கின்ற சமூகநீதி என்ற கொள்கை வழியிலான பார்வைதான் அதற்கு அடிப்படை என்பதை விளக்கவும் தேவையில்லை. மீட்கப்பட்ட கலைகளில் ஒன்றாக, போரில் வெற்றி கண்ட பின் முழங்கும் இசைக்கருவி விழாவில் வாசிக்கப்பட்டது. ஆனால், அந்த இசைக்கருவியை வாசிக்கும் சூழல் 'திராவிட மாடல் ஆட்சி'க்கு அமையவில்லை. மீண்டும் அமையும்.

...முற்றும்

## ரியல் கொள்கைக்கு வீழ்ச்சி ஏது?

2011-ஆம் ஆண்டு தேர்தலில், கழகம் தோல்வியுற்றிருந்த சமயம். சட்டமன்றத்தில் அன்றைக்கு எதிர்க்கட்சியாகக்கூட தி.மு.கழகம் இல்லை. இளைஞர்கள் தி.மு.கழகத்தோடு இல்லை என்றெல்லாம் எதிரிகள் பேசத் தொடங்கியிருந்தனர். ஃபேஸ்புக் பிரபலமாகத் தொடங்கியிருந்த காலகட்டமும்கூட. எந்தவொரு கட்சியும் தகவல் தொழில்நுட்ப அணி என ஒன்றையும் அப்போது ஏற்படுத்தியிருக்கவில்லை. அந்தக் காலச்சூழலில் இணைய உலகில் இயக்கத்திற்கான கருத்தியல் பரப்புரையை மேற்கொள்ள தன்னார்வத்துடன் ஒரு படை புறப்பட்டது.

அன்றைக்கு பெரியார் திடலில் பயிற்சிப் பாசறையை நடத்தி, 'ஃபேஸ்புக்', 'ப்ளாக்' போன்ற தளங்களில் தி.மு.க.வுக்கு எதிரான பொய்ப் பரப்புரையை முறியடிக்க அவர்கள் பணியாற்றினர். அதன் பலன் 2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எதிரொலித்தது. அதுபோலவே, தற்போது 2026-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளுக்குப் பிறகும், இளைஞர்கள் தி.மு.க.வுடன் இல்லை என்ற கருத்துருவாக்கத்தைச் சிலர் செய்யத் தொடங்கியுள்ளனர். ஆனால், அந்த மடமைத்தனமான வாதங்களை முளையிலேயே கிள்ளியெறிய புறப்பட்டிருக்கிறது, GEN Z படை.

'தி.மு.க. GEN Z தலைமுறை' என்று தங்களை அறிவித்துக்கொண்டு, அண்ணா நகரில் கூடுவதற்குத் திட்டமிட்டது இந்தப் படை. அதற்கு வரவேற்பு கூடவே, அரங்க நிகழ்ச்சியாக மாற்றினர். ஆனால், GEN Z இளைஞர்கள் அரசியல் தெளிவு பெற்றுவிடக் கூடாது என்று அஞ்சி, முடக்க முயற்சி செய்துள்ளனர் ஆட்சியாளர்கள். எவர் தடுத்தாலும் கூடல் நடக்கும் எனக் கழகத் தலைமையகமாக அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் கூடி, பெரும் எழுச்சியை உருவாக்கியுள்ளது இந்தப் படை. இன்றைய இளைய தலைமுறை தி.மு.க.வின் சமத்துவ - சம உரிமைக் கொள்கைகளில் எத்தகைய உறுதிகொண்டு இருக்கிறார்கள் என்பதை உலகுக்குப் பறைசாற்றி இருக்கிறது அந்தக் கூட்டம்.

'ரீல்ஸ் ஆட்சி'யை அலறவைத்திருக்கிறார்கள், ரியல் கொள்கையாளர்கள் எனச் சமூக வலைதளங்களிலும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



செஞ்சி டி.ராஜூ



### மாணவர் அணிக்குத் தலைவர்களின் வாழ்த்து!

1992-ஆம் ஆண்டு, செங்கை அண்ணா (வடக்கு) மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள், அன்றைய மாணவர் அணிச் செயலாளர், இன்றைய கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் இரா.ஏ.பாபு மற்றும் துணை அமைப்பாளர்கள் அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர், கழகப் பொருளாளர் ஆற்காட்டார் ஆகியோரிடம் வாழ்த்து பெற்றோம். அப்போது, மாணவர் அணியில் இருந்து செயல்பட்ட நானும் வாழ்த்து பெற்ற அந்த நினைவுகள் என்றும் அழியாது!

**- செஞ்சி டி.ராஜூ, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், செஞ்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பெரியார், அண்ணாவின் அன்பு!

28.03.1949 அன்று 'அஞ்சா நெஞ்சன்' பட்டுக்கோட்டை அழகிரி உடல்நலக் குறைவால் காலமானார். தஞ்சை மாவட்டம், கருந்தட்டாங்குடி வடவாற்றின் கரையில் உள்ள இடுகாட்டில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவரது மறைவால் மனம் உடைந்திருந்த பெரியார், மே 29-ஆம் நாள், தஞ்சையில் கலைவாணர் உதவியுடன் அழகிரியின் குடும்ப நல உதவியாக ரூ.6,000 வழங்கினார். அழகிரி உடல் பாதிக்கப்பட்டிருந்தபோதே, நாடகம் மூலம் ஈட்டிய 600 ரூபாயை அவருக்குக் கொடுத்த பேரறிஞர் அண்ணா, தன்னை கூட்டத்திற்கு அழைப்பவர்கள், அழகிரிக்கு 100 ரூபாய் அனுப்பிவைக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900